மீண்டும்
# தமிழ்ச்சோலை

சிறப்பாசிரியர் : சா. கணேசன் ★ ஆசிரியர் : மா. செங்குட்டுவன்

மலர் 9
இதழ் 7

நவம்பர்
2000

## தன்மானத் தமிழ் மறவர் இலக்குவனார்!

இலக்குவனார் அவர்கள் தமிழ் இனத்துக்குத் தேவையான சுயமரியாதையை எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

அந்தச் சுயமரியாதைத் தன்மை அவர் மறைகிற வரைக்கும் அவரோடு இருந்தது. இலக்குவனார் அவர்கள் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றார்கள். தமிழ் வீறுகொண்டு வாழ வேண்டும் பெருமையுடன் வாழ வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள்.

அவர் தயாரித்தவர்களெல்லாம் மாணவர்கள் என்று சொல்வதைவிட அழுத்தம் திருத்தமான போர் வாட்களைத் தான் அவர் தயாரித்தார் என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும்.

அவர் யாருக்கும் தலை வணங்காமலே வாழ்ந்தார். அவர் கனகவிசயனை எதிர்த்து வெற்றி கண்ட சேரன் செங்குட்டுவனைப் போல் இருந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர்



(நவம்பர் 17ஆம் நாள், டாக்டர் சி.இலக்குவனாரின் 91ஆம் ஆண்டு பிறந்த நாளாகும்.)

இலக்கியத் திங்கள் இதழ்

விலை
ரூ.5/-

வெளியிட்ட முனைவர் பட்ட ஆய்வு நூல்தான். உலக நாடுகளுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா அந்நூலை எடுத்துச்சென்று கொடுத்துப் பேருவகை அடைந்தார். அப்படித்தான் அவர் யேல் பல்கலைக்கழகத்திலும் அதனைக் கொடுத்தார். போப் ஆண்டவரிடமும் கொடுத்தார். தமிழக அரசு இந்நூலை உலகெங்கும் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் மொழி அமைப்புகளுக்கும் அளிக்க வேண்டும். சங்கப் பலகையில் உள்ளவர்களே தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முயன்று வருவதாக அறிகிறோம். புதிய மொழி பெயர்ப்புகள் வருவது நல்ல முயற்சிதான். எனினும் பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்ற பேராசிரியர் இலக்குவனார் நூலையே சங்கப் பலகை ஏற்கலாம்.

பேராசிரியர் இலக்குவனார் பிறந்தநாளைத் தமிழ் எழுச்சி நாளாகக் கொண்டாட வேண்டும். நல்ல இதழ்களுக்கு இலக்குவனார் பெயரில் விருதுகள் வழங்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்ட நூலகங்களுக்கோ திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கோ, பேராசிரியர் இலக்குவனார் பெயரைச் சூட்டலாம். பேராசியர் இலக்குவனாரின் நினைவைப் போற்றும் வகையில் நாம் எதுவும் செய்யவில்லையேல் நன்றி மறந்தவராவோம்.இலக்குவனார் புகழ் பாடி இன்றதமிழ் வளர்ப்போம்.

## எழுத்தாளர்களும் புத்தகத் தொழிலும்

10.10.2000 செவ்வாய் மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் லயன் ஏ.வி.சுப்பாராவ் தலைமை நடைபெற்ற கூட்டத்தில் அவர் தரமான தமிழ்ப்புத்தகங்களை வெளிநாடுகளில் விற்பனை செய்ய இயலும் என்று கூறினார்.

அரசு அச்சுக்கூடத்தில் ஒரு தொழிலாளியாக, வேலை செய்வதைவிட சுயமாகத் தொழில் நடத்தினால் பலபேருக்கு வேலை கொடுக்கக் கூடிய ஒரு தொழில் அதிபராக தம்மால் மாற முடிந்தது என்றார் மூவேந்தர் முத்து.

வெளிநாடுகளில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் விருப்பமுடன் அவற்றைப் படித்துப் பொது அறிவை வளரச் செய்து கொள்கிறார்கள் என்றார் கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்.

குழந்தைகள் உலகம் ஏ.ஜி.எஸ். மணி குழந்தைகளுக்காக இதுவரை வெளிவராத விதத்தில் நல்ல புத்தகங்களை எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் கூட்டு முயற்சியில் வெளியிட வேண்டும் என்றார்.

திரு.கெ.பக்தவத்சலம் அனைவரையும் வரவேற்றார். புலவர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

## கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் !

ஒரே கவிஞர் வெண்பா விருந்துக்கும், செந்தமிழ்க் கட்டளைக்கும் பாடல் எழுதத் தேவையில்லை. ஏதேனும் ஒன்றுக்கு எழுதினால் போதும்.

இடமின்மை காரணமாக, ஒருவர்க்கே இரண்டு இடங்கள் ஒதுக்குவதைத் தவிர்க்கவே இவ்வறிப்பு.

வளர்ந்த கவிஞர்கள் (வளரும் கவிஞர்களுக்கு வழிவிட்டு) செந்தமிழ்க் கட்டளைக்கு எழுதலாம். வளரும் கவிஞர்கள் வெண்பா விருந்துக்கு எழுதலாம்.

ஒருவர் ஒரு பாடல் மட்டுமே (அஞ்சல் அட்டையில்) எழுதியனுப்ப வேண்டும். பல் வேறு புனைபெயர்களில் பல பாடல்களை எழுதக் கூடாது. உறுப்பினர் கட்டணம் அனுப்பிய கவிஞர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை அறிக.

*-ஆசிரியர்*

***வெண்பா விருந்து தொடர்ச்சி.....***

திசையெலாம் தேமதுர நல்சோசை கேட்க
இசைப்பாடல் தந்தார் சுரதா - விசையாய்த்
தமிழுணர்வைத் தூண்டும் தரமான பாக்கள்
நமக்களித்தார், நாமளிப்போம் வாழ்த்து

***-வசந்தநாயகன், வாணியம்பாடி.***

உவமை சிறக்க உயர்கவிதை யாத்தே
எவரையும் ஈர்த்தார் சுரதா - உவமை
இவர்க்கில்லை உண்மை; தமிழன்னை பெற்ற
தவப்புதல்வர் என்றேநீ சாற்று.

***-தண்டுகுண்ணத்தூர் நம்பி.***

